# சப்பிரகமுவ மாகாணக் கல்வித் திணைக்களம்

## முதலாம் தவணைப் பரீட்சை - 2016

கத்தோலிக்க திருமறை - 11

மூன்று மணித்தியாலம்

சுட்டெண்:.........................................

## பகுதி - I

**01.** மிகப் பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுக. (1 × 40 = 40 புள்ளிகள்)

1) பெரிய இறைவாக்கினர்களுள் ஒருவராக கருதப்படுபவர்,
1. மலாக்கி 2 நாகூம் 3. எசாயா 4. ஒசேயா

2) யாவே பாரம்பரியத்தைக் குறிப்பிடும் எழுத்து யாது?
1. **D** 2. **E** 3. **P** 4. **J**

3) யோவான் நற்செய்திக்குரிய அடையாளமாவது,
1. மனித முகம் 2. கழுகு 3. எருது 4. சிங்கம்

4) இறைவன் மோசேக்கு தன்னை யாரென அறிமுகம் செய்தது,
1. செங்கடலின் நடுவில் 2. மேகத்தூணில் 3. எரியும் முட்செடி நடுவில் 4. பாறை நடுவில்

5) பத்துக் கொள்ளை நோய்களில் ஐந்தாவது கொள்ளை நோயாகக் காணப்படுவது,
1. கல் மழை 2. தலைமகன் சாவு 3. தவளைகள் பெருக்கம் 4. கால் நடை சாவு.

6) கடவுள் நோவாவோடு செய்து கொண்ட உடன்படிக்கையின் அடையாளமாவது,
1. சூரியன் 2. வானவில் 3. கார்மேகம் 4. விண்மீன்கள்

7) இஸ்ராயேல் மக்களை அடிமைப்படுத்திய மன்னன்,
1. தாவீது 2. சாலமோன் 3. பார்வோன் 4. சவுல்

8) புற இனத்தவரின் நற்செய்தி என அழைக்கப்படுவது,
1. புனித மத்தேயு நற்செய்தி 2. புனித லூக்கா நற்செய்தி
3. புனித யோவான் நற்செய்தி 4. புனித மாற்கு நற்செய்தி

9) இணைத்திருமுறை நூல்களின் எண்ணிக்கை
1. 5 2. 9 3. 6 4. 7

10) புனித மாற்கு நற்செய்தி எழுதப்பட்ட காலமாவது,
1. கி.பி 64 – 66 2. கி.பி 80 -85 3. கி.பி 90 – 100 4. கி.பி 80 -90

11) மக்களால் விரும்பப்படுகின்ற இரு வரலாற்று நூல்களாவன,
1. எஸ்ரா, நெகேமியா 2. தோபித்து, யூதித்து 3. ரூத், எஸ்தர் 4. புலம்பல், பாரூக்

12) புதிய ஏற்பாட்டில் காணப்படும் வெளிப்பாட்டு இலக்கியம்,
1. மாற்கு 2. திருவெளிப்பாடு 3. தீத்து 4. யூதா.

13) நிறக் குறியீடுகளில் கறுப்பு நிறம் குறிப்பது,
1. வெற்றி 2. பஞ்சம் 3. யுத்தம் 4. மரணம்

14) பிற இனத்தாரின் திருத்தூதர் என அழைக்கப்பட்டவர்,
1. தூய யோவான் 2. தூய மத்தேயு 3. தூய லூக்கா 4. தூய பவுல்

15) ‘பேதுரு’ என்பதன் பொருள்,
1. கட்டிடம் 2. பாறை 3. மணல் 4. கல்

16) 2013ம் ஆண்டிற்கான ‘சிறந்த மனிதர்’ என்ற விருதைப் பெற்றவர்,
1. ஒபாமா 2. அப்துல் கலாம் 3. அன்னை தெரேசா 4. திருத்தந்தை 1ம் பிரான்சிஸ்

17) குருத்துவம் ஏற்படுத்தப்பட்டது,
1. பெரிய வெள்ளி 2. பெரிய வியாழன் 3. புனித சனி 4. உயிர்ப்பு ஞாயிறு.

18) மரியாயின் மாசற்ற இருதயசேனை என்ற அமைப்பினை ஆரம்பித்தவர்,
1. புனித யோசேப் வாஸ் 2. அருட்பணி மைக்கல் றொட்றிகோ
3. புனித மக்ஸிமிலியன் கோள்பே 4. புனித பிரான்சிஸ்

19) மரியாளின் அமல உற்பவ திருவிழா,
1. ஆவணி 15 2. மார்கழி 8 3. புரட்டாதி 8 4. தை 6

20) பரிசுத்த வாரமாகக் கருதப்படுவது
1. பெரிய வியாழன் - அல்லேலூயா சனி கிழமை 2. பெரிய வியாழன் - பெரிய வெள்ளி
3. குருத்தோலை ஞாயிறு - அல்லேலூயா சனி கிழமை 4. குருத்தோலை ஞாயிறு – பெரிய வெள்ளி

21) பொதுக்காலத்தில் பயன்படுத்தப்படும் நிறம்,
1. பச்சை 2. சிவப்பு 3. ஊதா 4. வெள்ளை

22) தூய பவுலின் திருமுகங்கள்,
1. 12 2. 13 3. 15 4. 14

23) தூய பவுலால் தனிப்பட்ட நபருக்கு எழுதப்பட்ட திருமுகமாவது,
1. பிலமோன் 2. பிலிப்பியர் 3. தீர்த்து 4. கொலோசையர்

24) இயேசுவின் உடலை சிலுவையிலிருந்து இறக்கி அடக்கம் செய்ய முன்வந்தவர்,
1. அரிமத்தியா ஊர் யோசேப்பு 2. சூசை 3. சீரேன் ஊர் சீமோன் 4. பேதுரு.

25) தியோப்பில் என்ற பெயரின் அர்த்தம்,
1. இயேசுவின் நண்பன் 2. மரியாளின் நண்பன் 3. ஆண்டவரின் நண்பன் 4. சீமோனின் நண்பன்

26) பெந்தகோஸ்து என்பது,
1. 60ம் நாள் 2. 50ம் நாள் 3. 70ம் நாள் 4. 40ம் நாள்.

27) தூய பவுல் எக்கோத்திரத்தைச் சார்ந்தவர்?
1. யூத கோத்திரம் 2. லேவி கோத்திரம் 3. பெஞ்சமின் கோத்திரம் 4. நப்தலி கோத்திரம்

28) இலங்கையின் அப்போஸ்தலர் எனப்படுபவர்,
1. புனித லோறன்சியார் 2. புனித யோசேப் வாஸ் 3. புனித செபஸ்தியார் 4. புனித அந்தோனியார்

29) இரத்தினபுரி மறைமாவட்டத்தின் ஆயர்,
1. மேதகு ஆயர் ஜோசப் வியன்னி 2. மேதகு ஆயர் கிளீட்டஸ் சந்திரசிரி பெரேரா
3. மேதகு ஆயர் இராயப்பு ஜோசப் 4. மேதகு ஆயர் ஹரல்ட் அந்தனி

30) இலங்கையிலுள்ள மறைமாவட்டங்களின் எண்ணிக்கை,
1. 10 2. 11 3. 12 4. 13

31) நோவா வெள்ளப் பெருக்கிலிருந்து காப்பாற்றப்பட்டது,
1. நீதிமான் என்பதால் 2. வயது முதிர்ந்தவர் என்பதால்
3. அன்புள்ளவரென்பதால் 4. விட்டுக்கொடுக்கும் தன்மையுள்ளவரென்பதால்

32) யாக்கோபுவின் பிள்ளைகள்,
1. 11 புதல்வர்கள் 2. 12 புதல்வர்கள் 3. 13 புதல்வர்கள் 4. 14 புதல்வர்கள்

33) இஸ்ராயேல் மக்களுக்கு இறைவன் வாக்களித்த நாடு,
1. எகிப்து 2. எருசலேம் 3. கானான் 4. கோமோரா

34) பேதுருவின் முதல் மறையுரையில் மனமாறியவர்கள்,
1. ஐயாயிரம் பேர் 2. இரண்டாயிரம் பேர் 3. மூவாயிரம் பேர் 4. நான்காயிரம் பேர்

35) தூய பவுலின் முதலாவது தூதுரைப் பயணத்தின் பயணத் தோழர்கள்,
1. பர்ணபா, யோவான் மாற்கு 2. பர்ணபா, சீலா 3. லூக்கா, சீலா 4. திமோத்தேயு, சீலா

36) பவுல் சிரம் வெட்டிக் கொலைசெய்யப்பட்டது,
1. கி.பி 67ல் 2. கி.பி 68ல் 3. கி.பி 69ல் 4. கி.பி 65ல்

37) போர்த்துக்கேயர் இலங்கைக்கு வந்தது,
1. 01.07.1505 2. 15.11.1505 3. 08.08.1505 4. 21.04.1505

38) ஒத்தமை நற்செய்தியாளர்கள்
1. மத்தேயு, மாற்கு, லூக்கா 2. லூக்கா, மத்தேயு, யோவான்
3. மாற்கு, லூக்கா, யோவான் 4. மத்தேயு, மாற்கு, யோவான்

39) புனித அன்னை தெரேசா எயிட்ஸ் நோயாளருக்கான முதல் இல்லத்தை - ---------------- ஆரம்பித்தார்
1. கல்கத்தாவில் 2. கொழும்பில் 3. நியுயோர்க்கில் 4. மனிலாவில்

40) 'குறொசிங் த த்ரஸ்ஹோல்ட் ஒப் ஹோம்' என்ற நூலை -------------------------------- எழுதினார்
1. புனித 2ம் அருளப்பர் சின்னப்பர் 2. திருத்தந்தை 1ம் பிரான்சிஸ்
3. திருத்தந்தை 16ம் ஆசீர்வாதப்பர் 4. திருத்தந்தை 23ம் அருளப்பர் சின்னப்பர்.

---

## பகுதி - II

**முதலாம், இரண்டாம் வினாக்களுட்பட எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை தருக.**

1.
1. மனிதப் படைப்பு பற்றி கூறும் இரு மரபுகளை எழுதுக.
2. இரண்டு பாரம்பரியங்களைத் தருக.
3. இணைத்திருமறை நூல்கள் இரண்டு தருக.
4. பெரிய இறைவாக்கினர் இருவரைத் தருக.
5. நற்செய்தியாளர் இருவரையும் அவர்களுக்குரிய அடையாளங்களையும் தருக.
6. ஆண்டவர் ஆபிரகாமுக்கு கொடுத்த வாக்குறுதிகளைத் தருக.
7. முதலிரண்டு கொள்ளை நோய்களையும் தருக.
8. இறைவன் உடன்படிக்கை செய்து கொண்ட இருவரின் பெயர்களைத் தருக.
9. திருச்சபையின் பண்புகள் இரண்டைத் தருக.
10. வெளிப்பாட்டு இலக்கியத்தின் பண்புகள் இரண்டு தருக.

2. வகுப்பறைமட்டக் கணிப்பீட்டை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.
அ) வகுப்பறையில் நீர் மேற்கொண்ட கணிப்பீட்டின் தலைப்பை எழுதுக.
ஆ) கணிப்பீட்டினை மேற்கொள்ளும் போது நீர் எதிர்கொண்ட சவால்கள் 3 தருக.
இ) வகுப்பறைமட்டக் கணிப்பீட்டினால் நீர் பெற்றுக்கொண்ட நன்மைகள் 5 தருக.

3.
அ) திருவழிபாட்டு ஆண்டு எத்தனை வாரங்களைக் கொண்டது?
ஆ) திருவழிபாட்டு ஆண்டு காலச்சக்கரத்தை தருக.
இ) கிறிஸ்தவ மாணவன் என்ற வகையில் உமது பங்கில் திருவழிபாட்டு வழிபாடுகளை அர்த்தமுள்ள வகையில் செயற்படுத்த உம்மால் முன்வைக்கக் கூடிய ஆலோசனைகள் 5 தருக.

4.
அ) ஐந்நூலிற்கு வழங்கப்படும் வேறு பெயர்கள் இரண்டு தருக.
ஆ) பாரம்பரியங்கள் இரண்டு தந்து அவற்றை சுருக்கமாக விளக்குக.
இ) ஐந்நூலைப் படிப்பதினால் உமது வாழ்க்கைக்கு கிடைக்கும் பயன்கள் ஐந்தினைத் தருக.

5.
அ) குலமுதுவர்களைத் தருக.
ஆ) வாக்களிக்கப்பட்ட நாட்டிற்கு இஸ்ரேயல் மக்கள் சென்ற வேளை அவர்கள் பெற்றுக்கொண்ட இறைபராமரிப்பை தருக.
இ) உமது வாழ்வில் நீர் பெற்றுக்கொண்ட இறைபராமரிப்பு அனுபவங்கள் 5 தருக.

6. பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சிறுகுறிப்பெழுதுக.
அ) பத்துக் கொள்ளை நோய்
ஆ) நான்கு பாரம்பரியங்கள்
இ) புனித இரண்டாம் அருளப்பர் சின்னப்பர்
ஈ) புனித யோசேப் வாஸ் அடிகள்.